1980 ஜூலை 30]

கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். எங்கேயாவது அவர்கள் மாற்றலாகப் போய்விட்டால் வாரியத்தின் அனுமதி பெற்று வாடகைக்கு விடுகிறார்கள். எனவே, இது சப்-லெட்டிங் என்ற தலைப்பில் வரும் என்று நான் கருதவில்லை.

நாகர்கோவில் அரசு மருத்துவமனை.

*கு. கா. வி. எண் 50—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகர்கோவில் பெரிய அரசு மருத்துவமனையில் (Anaesthetist (அனஸ்தடிஸ்ட்), (Skin specialist, தோல் வியாதி நிபுணர்) Orthopaedic specialist (எலும்பு முறிவு வல்லுனர்) ஆகியோர் உள்ளனரா ?

(ஆ) இல்லை என்றால் உடனே நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சரும நோய் மருத்துவர் மட்டும் தற்போது உள்ளார்.

(ஆ) மற்ற காலி இடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அறுவை சிகிச்சை செய்யும் காலங்களில் நோயாளிகள் சொரணை இல்லாமல் செய்யக்கூடிய மருத்துவர், அனஸ்தடிஸ்ட் இல்லாததால், சில மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து கொளும் நோயாளிகள் நிரந்தரமாகவே சொரணை இல்லாமல் போய், மாண்டுவிடுகிறார்கள். ஆகவே எல்லா தனியார், அரசு மருத்துவமனைகளிலும் பெரிய அறுவை சிகிச்சை செய்யும் போது அனஸ்தடிஸ்ட் இருக்கவேண்டும் என்றும், அப்படி அனஸ்தடிஸ்ட் இல்லாத மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையே செய்யக்கூடாது என்றும் பொதுவான ஒரு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனஸ்தீசியா குவாலிபைடு டாக்டர் அங்கே இல்லை என்றாலும் கூட, அங்கே இருக்கின்ற எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள், அனஸ்தீசியாவில் ஓரளவுக்கு பயிற்சி பெற்றவர்கள் அந்த பணியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் எந்தவிதமான தொல்லையும் இல்லை.

என்றாலும், கூட, அனஸ்தடிஸ்ட்டை போடவேண்டும் என்று இப்போது ஆணை பிறப்பித்திருகிறோம். அனஸ்தடிஸ்ட் பயிற்சி பெற்ற, டிக்ரி வாங்கிய டாக்டர் ஒருவர் அந்த இடத்தில் போடப் படுவார் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாகர் கோவிலிலே அறுவை சிகிச்சை ஸ்பெசலிஸ்ட் மட்டும் தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே ஆர்த்தோ பிடிக் டாக்டரும், அனஸ்தீசியா டாக்டரும் முன்பு இருந்தார்கள். இன்று இல்லை. அந்தஇல்லாத குறையை மிகுந்த குறைந்த நாட்களில் இந்த அரசு நிறைவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாளன்று ஒரு ஆர்த்தோபிடிக் சர்ஜன் நியமிக்கப்பட்டிருக்கிறார். நான் வேண்டுமானால் அவர் பெயரைக்கூட சொல்லுகிறேன்.

Dr. K. Rajapandian, M. B. B. S., D. Ortho. 1980ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23ஆம் நாள் அன்றுதான் Public Service commission மூலம் தேர்வு செய்யப்பட்டவர். இன்னும் இரண்டொரு நாட்களில் அவர் அங்கே சேர்ந்துவிடுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல E. N. T., Eye, Siddha, Dental, Blood Bank, X-ray, Paediatrics, Ortho departments.

இந்தப் பதவிகள் எல்லாம் பார்ட் 2 ஸ்கீமில் சாங்ஷன் செய்து முடித்துவிட்டு இருக்கிறார்கள். அவர்களும் அந்தப் பதவியில் நிரப்பப்படுவார்கள். அது மட்டுமல்ல Government have sanctioned the construction of building for maternity ward and outpatient block

அந்த அளவுக்கு புதிதாக ஸ்பெஷல் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் தகவல் நிச்சயமாக மாண்புமிகு வின்சென்ட் அவர்களுக்கு மன நிறைவைத் தரும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

1980 ஜூலை 30]

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, நாகர் கோவில் பெரிய அரசு மருத்துவ மனைக்கு ஸ்பெஷலிஸ்ட்டுகளும், பல லட்ச ரூபாய் அளவிற்கு கட்டிட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது உள்ளபடியே வரவேற்கத் தக்கதொன்றாகும். மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதேபோல், பல்வேறு நகராட்சி பகுதிகளிலும் இது போன்ற வசதிகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தனி வகையிலேயே எல்லாவற்றையும் ஆராய்ந்து, எந்தெந்த இடங்களில் விரிவுபடுத்தி, நல்ல நிபுணர்களை அனுப்பலாம் என்று சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம். ஏனெனில் இதிலே ஓரளவிற்கு அந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளில் நிபுணர்கள் போடாமல் இருக்கிற காரணத்தால், விரைவில் அதற்குரிய ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டி. பி. நோயாளிகளுக்கு ஒரு பிரிலிமினரி டெஸ்ட் நடத்துவதற்குத் தகுந்த அளவில் ஒரு டி. பி. ஸ்பெஷலிஸ்ட் பதவியைஅந்த நாகர் கோவில் தலைமை மருத்துவ மனையில் அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அங்கே டி.பிக்காக ஒரு தனிப்பட்ட மருத்துவ மனை இல்லையென்றாலும், அதற்காக ஒரு டிப்பார்ட்மென்ட் இருக்கிறது. அந்த டிப்பார்ட்மென்டில் எல்லாப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஒரு எம். டி. செஸ்ட் டிஸ்ஸீஸ் இல்லை என்றாலும், அங்குள்ள டாக்டர் எம். டி. படித்தவர், டி.பி. வியாதியை நன்றாக கவனித்து அதற்குத் தகுந்த சிகிச்சைச் செய்வதற்காக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை-கொடைக்கானல் இடையே குளு, குளு பேருந்துப் போக்குவரத்து.

கு.கா. வி. எண். 51—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு ஈரோடு, திருப்பூர், பழனி வழியாக குளு குளு பேருந்து விடும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?